# டாக்டர் இராஜினி திரணகம கொலை:

மிடுக்கான இராணுவ உடுப்பும், தோட்டாக்களின் மாலையும், பாக்கெட்டுக்களில் எறிகுண்டுகளும், கையிலே இயந்திரத் துப்பாக்கி ஏ.கே.47ம் ஏந்தி, 'போராளி' என்ற பட்டங்கட்டிக் கொண்டிருந்த போதும், பகிரங்கமாக உரிமை பாராட்டிக் கொள்ள முடியாத அநீதியான ஒரு செயலைச் செய்யும்போது எவ்வளவு கோழையாகி விடுகிறான்!

புறநிலை நோக்கு, உண்மை மீதான வேட்கை, நடுவு நிலையான ஆய்வு, நேர்மையான நிலைப்பாடுகள் ஆகிய இலட்சியத்தையே ஆயுதமாக ஏந்தி மனித உரிமை - நீதிக்காகப் போராடும்போது நிராயுதபாணியான ஒரு தாயும் எவ்வளவு வீரமிக்க போராளியாக உயர்ந்து நிற்கிறாள்!

யாழ் பல்லைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் தலைவர், வைத்தியக் கலாநிதி இராஜினி திரணகம அத்தகைய வீரத்தாயாக, 'நிராயுதபாணி'யான பெண் போராளியாக வாழ்ந்தார். இவர் கடந்த செப்டம்பர் 21ந் தேதி மாலை ஆறு மணிக்கு மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வை முடித்துக் கொண்டு தனியே வீடு திரும்பினார். அவருக்காகக் காத்திருந்த ஒரு கொடிய முகந்தெரியாத கோழை ஈனத்தனமான முறையில் இராஜினி திரணகமவைச் சுட்டுக் கொன்றான்.

டாக்டர் இராஜினி திரணகமவின் கொலைச் செய்தி கேட்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், இன்னும் சிந்திக்கும் திறனை இழந்துவிடாத அல்லது அதனை அடகு வைத்துவிடாத ஈழத் தமிழர்கள் அனைவருமே அதிர்ச்சியும் துயரமும் அடைந்தனர். அவர்கள் ஒரே குரலில் உரக்கக் கேட்டனர் ''இப்படி ஈனத்தனமாக படுகொலை செய்யப்படுமளவிற்கு இவர் செய்த குற்றம்தான் என்ன?''

இராஜினி திரணகம — யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்து பின்னர் இங்கிலாந்தில் உடல் அமைப்பியல் கலாநிதி பட்டம் பெற்றார். ஈழத்தின் இப்போதைய நிலைமைகளை எதிர்நோக்கப் பயந்து வெளிநாடுகளில தமது சுகபோகங்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டு ஈழத்தின் புத்திஜீவிகள் வெளியேறும் பொழுது, 3 வருடங்களுக்கு முன்பு சமூகப் பொறுப்புணர்ந்து யாழ்ப் பல்கலைக் கழகத்துக்கே திரும்பி விரிவுரையாளராகப் பணியாற்றியது குற்றமா? கணவர் திரணகம தென்னிலங்கையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் தனியொருத்தியாக இரு பெண் குழந்தைகளுடன், மருத்துவத் துறையின் சுமை மிகுந்த பிரிவை மிகத் திறம்பட நடத்திக் கொண்டு வந்தது குற்றமா?

ஈழத் தமிழ்ச் சமுதாயத்தின் இன்றைய துயரங்கள் - அவல நிலைமைகளுக்கு காரணமான போராளிக் குழுக்கள், இலங்கை அரசு, இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அக்கிரமங்கள், அட்டூழியங்கள் கண்டு கொதித்தெழுந்தார். இத்தகைய பலவீனமான நிலையில் தன்னைப் போன்ற புத்திஜீவிகள் கட்டாயம் சிறந்த எதிர்கால நோக்குடன் கூடிய தீர்வுகளை முன் வைத்து சமுதாயத்தை தூக்கி முன் நிறுத்தும் சமூகப்பணி - பாத்திரம் ஆற்ற வேண்டும் என்று முயன்றார். அதன் விளைவாக அதே சிந்தனை நோக்குடைய 3 சகவிரிவுரையாளர்களுடன் இணைநது ''முறிந்த பனைமரம்'' என்ற விமர்சன ஆய்வு நூலை வெளியிட்டார். அதிலே ஈழத்தின் நிகழ்கால அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் உள், வெளி ஆதிக்க சக்திகள் எல்லாவற்றையும் ஒரு நடுவுநிலை நோக்கில் விமர்சனம் செய்திருந்தார். இக்குழப்பமான, தெளிவில்லாத காலகட்டத்தில் வெளிப்படையாக, தெளிவாக ஈழ மக்களுக்கு என்ன வேண்டும் என்பதை வைத்தது குற்றமா?

## ஈழத் தமிழ் சமுதாயத்துக்கு ஒரு சவால்!



ஒடுக்கப்பட்டுள்ள இனத்துள் மேலும் ஒடுக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைக்காகவும் நடந்து கொண்டிருக்கிற சாவுகளினால் விதவைகளாகி, வாழ்வதே சுமையாகிப் போன பெண்களுக்காகவும் தனது கருத்துக்களை எந்த இடத்திலும் முன் வைத்து பெண்கள் சமத்துவத்தைத் தோற்றுவிக்க அயராது உழைத்தது குற்றமா?

தொடர்ந்து வந்த கால கட்டங்களில் நிகழ்ந்த, சிறுவர்களை பலவந்தமாக கடத்திப்போய் இராணுவங்களில் சேர்ப்பது போன்ற அட்டூழியங்களைக் கண்டு மனம் பொறுக்காமல் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை உருவாக்கி எல்லா அத்து மீறல்களுக்கும் எதிராக குரல் கொடுத்தது குற்றமா?

— இந்தக் கேள்விகளை எழுப்பிவிட்டு இக்கொலை பாதகச் செயலுக்கு காரணமானவர்கள் அதற்கான காரணங்களைக் கூறி, உரிமை கோரித் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும்படி பகிரங்கமான கோரிக்கை வைத்தனர் யாழ் பல்கலைக்கழக மாணவர், ஆசிரியர், ஊழியர்கள். ஆனால் கோழைகள் வெளியே வரவில்லை; உரிமை பாராட்டவோ, காரணங்களைக் கூறி நியாயப்படுத்தவோ இல்லை. இதுவே போதும் அவர்களின் செயல் அநீதியானது; இராஜினி திரணகமவின் தியாகம் மகத்தானது என்று நிரூபிப்பதற்கு!

கடமைப் பொறுப்புள்ள சாதாரண மருத்துவ பீட விரிவுரையாளராகவும், தாயாகவும் வாழ்ந்திருந்தால் இராஜினி திரணகம பிழைத்திருக்க முடியும். இல்லை, அவர் மட்டுமல்ல; ஒவ்வொருவரும் சமூகத்தைப் பாதிக்கும் விவகாரங்களில் கொள்கை ரீதியானதும் துணிவானதுமான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவரே துணிச்சலானவராகவும் சமுதாயம் அவ்வாறு இல்லாதது குறித்தும், கட்டாய இராணுவ ஆள்சேர்ப்பு போன்ற விவகாரங்களில் ஏனைய சமூக அமைப்புகள் செயலற்றிருந்தது கண்டும் கவலைப் பட்டார். ''எங்கள் பலரின் உயிருக்கு ஆபத்தானதாகவும் இருக்கும்'' என்று அறிந்தே சமூகப் பொறுப்பு காரணமாக துணிச்சலான, அவசியமான பணிகளை மேற்கொண்டு அதற்காகவே தியாகியானார்.

டாக்டர் இராஜினி திரணகம யாரால் கொல்லப்பட்டார் என்று ஊகிப்பது சிரமமானதல்ல. முக்கியமாக இந்திய ஆக்கிரமிப்பு மற்றும் ஈழத் துரோக அமைப்புகளின் அக்கிரமங்கள் அட்டூழியங்களை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார். ஈழத் துரோக ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எஃப், அல்லது ''டெலோ''வின் குண்டுகளுக்கு இராஜினி பலியாகி இருக்கலாம். அதே சமயம் அவரது பணிகள் மற்ற பிற பெரிய குழுக்களுக்கும் கூட நெருடலாகவே இருந்தன. எனவே எந்தக் குழுவினால் கொல்லப்பட்டார் என்பதை விட எந்தக் குழு முந்திக் கொண்டது என்பதே பொருத்தமானதாகும்.

காரணங்களையும், நியாயங்களையும் கூறி உரிமை கோரவும் துணிச்சலற்ற, அநீதியான முறையில் நிராயுதபாணிகளைப் படுகொலைகள் செய்வது ஈழத்தில் வழக்கமாகி விட்டது. மக்களின் விடிவுக்காக, நாட்டின் அமைதிக்காக, தேசத்தின் உரிமைக்காக போரிட ஆயுதம் ஏந்தியிருப்பதாக கூறிக் கொள்ளும் எல்லா போராளிக் குழுக்கள் கரங்களிலும் இராஜினி திரணகம போன்ற தியாகிகளின் இரத்தக்கறை படிந்திருக்கிறது.!

இராஜினி திரணகமவின் கொலை தனிப்பட்ட சம்பவமன்று; சமூகநலனில் அக்கறை கொண்ட முற்போக்கு எண்ணமுடைய அனைவரையும் வாய்மூடி மௌனியாக இருக்கும்படி எச்சரிக்கும் செயலாகும். இந்தச் சவாலை எதிர்த்து முறியடிப்பதன் மூலம் தான் ஈழச் சமுதாயமே மனிதத் தன்மையோடு பிழைத்திருக்க முடியும்!

□ மாணிக்கவாசகம்